Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 170/2022 PW-6**

Name : வினோத்ராஜ்
Father / Husband name : குமார்
Village : விழுப்புரம்
Age : 38

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.06.2026

Accused present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் மேற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் பணி செய்கிறேன். கடந்த 30.09.2021 அன்று காலை 11.30 மணிக்கு நான் ரோசணை காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது அ.சா.1 கோபண்ணா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 481/2021, U/s. 294(b),353,384,387 IPC ன் படி வழக்கு பதிவு செய்து இதன் அசல் வாதியின் அசல் புகாருடன் இணைத்து கனம் நீதிமனத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். வழக்கு கோப்பினை ஆய்வாளர் திருமதி.பிருந்தா அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசரித்தார்கள். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

28.09.2021 அன்று சம்பவம் நடந்து 30.09.2021 இரண்டு நாள் காலதாதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 யிடம் பொய்யான புகார் பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.